1990 மார்ச் 21]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மருத்துவமனைக்கு நாள்தோறும் சுமார் 500 புறநோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். அவர்களில் பலரை எக்ஸ்ரே படம் எடுப்பதற்காக தஞ்சை, குடந்தை போன்ற தொலைதூர மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதனால் ஏழை நோயாளிகள் பலரும் பல்வேறு அவதிக்கு உள்ளா யிருக்கிறார்கள். எனவே உடனடியாக இந்த அவல நிலையைக் கணக்கில் கொண்டு இந்த ஆண்டு எக்ஸ்ரே பிரிவை ஆரம்பிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைமைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகள் படிப்படியாக செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இம்மருத்துவமனையில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம் போதிய வசதி உள்ளதாக இல்லை. எனவே புதிய மகப்பேறு பிரிவுக் கட்டிடமும், அதைப்போன்று ஸ்பெசலிஸ்டுகள், கண் சிகிச்சை நிபுணர், பல் சிகிச்சை நிபுணர், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர் போன்ற நிபுணர்களைத் தொலை தூர நகரங்களில் அமைந் திருக்கின்ற மருத்துவமனைகளுக்கு நியமிக்க அரசு ஆணை யிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலே இதற்கான பதிலும் அடங்கியிருக்கிறது.

குடிநீர்த் திட்டம்

*5507 திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லைத் தொகுதியில் நாரணம்மாள்புரம் பேரூ ராட்சி, இராஜவல்லிபுரம் ஊராட்சி, சங்கர் நகர் நகரியம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதுகாக்கப்பட்ட ஆற்றுக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அழகநேரி கரையிருப்பு ஆகிய பஞ்சா யத்துப் பகுதிகளையும் இத்திட்டத்தோடு இணைத்து நிறை வேற்றிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனுமதி வழங்கி உள்ளது.

(ஆ) இல்லை. தற்போது இயலாது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊர்களையொட்டித்தான் இந்த அழகநேரி கரை இருப்பு போன்ற கிராமங்கள் இருக்கின்றன. இந்த அழகநேரி தச்சநல்லூர் பகுதியிலே குடிநீர் இருக்கிறது. இந்த இரண்டு கிராமங்களிலே மட்டும் இல்லை. இந்தத் திட்டத்தோடு அதையும் சேர்த்து அந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க முன்னுரிமை வழங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சங்கர் நகருக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அழகநேரி, கரையிருப்பு ஆகிய கிராமங்கள், $2\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திலும், $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கின்றன. அவற்றிற்கு 'பார்சியலி கவர்ட்' என்று சொல்லப்படுகிற, ஓரளவிற்குக் குடி நீர் கிடைக்கின்ற வாய்ப்பு இப்போது இருக்கிறது. முழுதும் குடிநீர் இல்லாதவர்களுக்கு மட்டுமே அரசு இப்போது முன்னுரிமை வழங்கி அதற்கான பணிகளைச் செய்து வருகிறது. அந்தப் பணி முடிவு அடைந்தவுடன் உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம், சங்கரன்கோவில் போன்ற நெடும் தொலைவில் உள்ள பகுதிகளுக்குக் கூட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் தாமிரபரணி ஆற்றையொட்டி இருக்கிற இந்த அழகநேரி கரையிருப்பு கிராமங்களுக்குத் தண்ணீர் தருவதில் தாமதம் ஏற்படுவது நேச்சுரல் ஜஸ்டிஸ் என்று சொல்கிற இயற்கை நியதிக்கு முரண்பட்டது என்ற காரணத்தால், விரைவில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கரையிருப்பு கிராமத்தில் 13 கையிறைப்பான்களும், 3 ஆழ் குழாய்க் கிணறுகளும் இப்போது உள்ளன. அது போல், அழகநேரி கிராமத்தில் 10 கையிறைப்பான்களும், 3 ஆழ் குழாய்க் கிணறுகளும் இப்போது செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. முழுமையாக நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால்தான், உறுப்பினர் அவர்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். முழுவதுமாக குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் கொடுத்ததற்குப் பிறகு, நிச்சயமாக இது போன்ற கிராமங்களை எடுத்துக் கொண்டு, அவற்றிற்குக் குடிநீரை வழங்குவதற்காக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.